பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை (17-11-1992) UTHAYAN - A Lively National Tamil Daily ஒளி 355

# தற்கொலைப் படைத் தாக்குதலில் கடற்படை தளபதி உடல்சிதறிப்பலி!

## மற்றும் இரு அதிகாரிகள் உட்பட மூவர் மரணம்; கார் சின்னாபின்னம்

கொழும்பு, நவம்பர் 17

நேற்றுக் காலை கொழும்பில் தற்கொலைப்படை வீரர் ஒருவர் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ தமது காருடன் சேர்ந்து சிதறிப் பலியானார். கடற்படையின் மற்றும் இரு அதிகாரிகளும் சாரதியும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

குண்டுகளைத் தாங்கியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப்படை வீரர் ஒருவர் கடற்படைத் தளபதியின் காருடன் மோட்டார் சைக்கிளை மோதியபோது இரு வாகனங்களும் வெடித்துச் சிதறின. தற்கொலைப்படை வீரரும் உயிரிழந்தார்.

கொழும்பு நகரின் மத்தியில் காலிமுகத் திடலுக்கு அருகே — காலிமுக மத்திய வீதியில் காலை 8 40 மணிக்கு இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டது.

கொழும்பு கோட்டை கடற்படைத் தலைமையகத்துக்குச் காரில் சென்று கொண்டிருந்த வேளையில் கடற்படைத் தளபதி குண்டு வெடிப்பில் சிக்கிச் சிதறினார்.

இச் சம்பவத்தில் அவருடன் காரில் கூடச் சென்ற அவரது மெய்ப் பாதுகாவலரும், அந்தரங்கச் செயலாளரும் உடல் சிதறிப் பலியாகினர். இவர்கள் இருவரும் கடற்படை அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்கள்.

காரைச் செலுத்தி வந்த கடற்படைச் சாரதி படுகாயமுற்ற நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் அங்கு மரணமானார்.

## மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப் படை வீரர்!

மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப்படை வீரர் ஒருவரே இக் குண்டு வெடிப்புத் தாக்குதலை நடத்தினார்.

சுமார் பத்து கிலோ குண்டைச் சுமந்து வந்த அந்த வீரர் தனது மோட்டார் சைக்கிளை, கடற்படைத் தளபதியின் காருக்கு அருகில் விரைவாகச் செலுத்திச் சென்று, காருடன் மோட்டார் சைக்கிளை மோதினார்.

மோட்டார் சைக்கிளும், காரும் குண்டு வெடிப்பில் சிதறின; தற்கொலைப் படை வீரரும் உடல் சிதறி உயிரிழந்தார்.

## ஐம்பது அடி உயரத்துக்கு கார் தூக்கி வீசப்பட்டது!

குண்டு வெடிப்பில் சிக்கிய தளபதியின் கார் சுமார் ஐம்பது அடி உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

தளபதியின் சடலமும் மற்றைய இருவரின் சடலங்களும் சின்னாபின்னமான காருக்குள்ளும் குண்டு வெடிப்பு நிகழ்ந்த பகுதியிலும் கருகிய நிலையில் சிதறிக் கிடந்தன; ஆங்காங்கே சதைத் துண்டுகள் காணப்பட்டன.

குண்டு வெடிப்பு நடந்த போது அப்பகுதியில் இருந்த இரு பொதுமக்களும் காயமுற்றனர்.

கடற்படைத் தளபதியின் காருக்குள் இரு சடலங்கள் சிதைந்து கிடந்ததைக் கண்டதாக சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

## தாக்குதலை தடுக்க முடியவில்லை

சம்பவம் நடந்த வேளையில் கடற்படைத் தளபதியின் காருக்கு முன்னேயும் பின்னேயும் பாதுகாப்பாக இரு ஜீப் வண்டிகள் சென்றுகொண்டிருந்த போதிலும்—

திடீரென முன்னேறி வந்து தளபதியின் காரை நெருங்கிச் சென்ற — இனந்தெரியாத — மோட்டார் சைக்கிள் வீரரை அந்த ஜீப்பில் வந்த பாதுகாப்புப் படையினரால் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டது என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

## குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணமாம்!

கொழும்பு, நவ 17

கடற்படைத் தளபதி கொல்லப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

இத்தாக்குதலுக்கு யாரும் இதுவரை உரிமை கோரவில்லை என்றும்—

ஆனால் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலின் சாயல் அப்படியே இருப்பதாகவும் பி பி ஸி தெரிவித்தது.

"கடந்த ஆண்டும் கொழும்பில் இடம்பெற்ற இதே போன்ற இரு தற்கொலைப் படைக் குண்டுத் தாக்குதல்களுக்கும் புலி[illegible] என்று பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

"ஆனால் புலிப் படையினர் இவற்றில் எந்தத் தாக்குதலையும் பொறுப்பேற்று அறிக்கை விடவில்லை.

"ஒரு தாக்குதலில் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கொல்லப்பட்டார், மற்றொரு தாக்குதலில் இராணுவ வீரர்கள் பலர் உயி[illegible] பி பி ஸி மேலும் தெரிவித்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முக்கிய இலக்காக கடற்படை தளபதி இருந்தார்

விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்காக ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி இருந்தார் என்று நெதர்லாந்து வானொலி குறிப்பிட்டது.

கடற்புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிரான பல திட்டங்களை கடற்படைத் தளபதி செயற்படுத்தினார் என்றும்—

மாதகலில் ஸ்ரீலங்காப் படையினரின் நடவடிக்கைகளை அவர் முன்னின்று நடத்தினார் என்றும்—

இந்திய கடற்படையுடன் சேர்ந்து புலிகளுக்கு எதிராக பாக்கு நீரிணைப் பகுதியில் கடற்படைக் கண்காணிப்பை அவர் தீவிரமாக்கினார் என்றும்—

இதனால் அவர் மீது புலிகள் கடும் கோபமுற்றிருந்தனர் என்றும் கொழும்பிலிருந்து நெதர்லாந்து வானொலிக்கு அனுப்பிய செய்தியில் அதன் செய்தியாளர் நீட்டா செபஸ்தியன் குறிப்பிட்டார். (உ-8)

## தகவல் தெரிந்திருந்தும் புலிகளை தடுக்க முடிந்ததா?

கொழும்பு, நவம்பர் 17

கொழும்பில் மீண்டும் குண்டுகள் வெடிக்கலாம் என்று ஒரு வாரத்துக்கு முன்னரே எச்சரிக்கப்பட்டிருந்தும் தலைநகரில் நேற்றுக் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது குறித்து விமர்சகர்கள் பலரும் அதிர்ச்சியும் அதிருப்தியும் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதலை நடத்துவதற்காக விடுதலைப் புலிகளின் அதிரடிப் படை ஒன்று கொழும்புக்குள் நுழைந்திருக்கிறது என்று புலனாய்வுத் துறையினர் பாதுகாப்புப் படையினரை முன்னெச்சரிக்கை செய்திருந்தனர். அது குறித்து

(5ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த அதிகாரிகள்

கடற்படைத் தளபதியின் காரில் பயணம் செய்து உயிரிழந்த கடற்படையினரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

- கடற்படை பிளையிட் லெப்ரினன்ட் சந்தல குணசேகரா.
- அதிகாரி தரத்தைச் சேர்ந்த எம். எம். டி. என். வீரசூரிய.
- கடற்படைச் சாரதி ஏ. எல் ஏ. பெரேரா.

## நியூஸிலாந்து அணியினரின் கிரிக்கெட் சுற்றுலா ரத்து!

கொழும்பு, நவ. 17

கொழும்பில் கடற்படைத் தளபதி குண்டு வெடிப்பில் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, கிரிக்கெட் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, தமது சுற்றுப் பயணத்தை ரத்துச் செய்து நாடு திரும்புவதாக நேற்றுமாலை அறிவித்தது.

நேற்று குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள "தாஜ் சமுத்திரா" ஹோட்டலில் தான் நியூஸிலாந்து குழுவினர் தங்கியிருந்தனர்.

கண்டியில் நடைபெறவிருந்த கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத்துக்கு அடி!

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

— இவ்வாறு ஆய்வாளர்கள் தெரிவிப்பதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஸ்ரீலங்காவில் — பாதுகாப்பற்ற சூழ்நிலையில் — முதலீடு செய்ய வெளிநாட்டவர்கள் பின்நிற்கிறார்கள். ஸ்ரீலங்கா அதிகாரிகள் அவர்களைச் சமாளித்து முதலீடு செய்ய வற்புறுத்திவரும் இவ்வேளையில் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்துக்கு மேலும் ஓர் அடி தந்திருக்கிறது என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர். (உ-3)

## "எக்ஸ்போ-92" நிகழ்ச்சி ஆரம்பவேளை அனர்த்தம்!

நாளை கொழும்பு நகரில் ஸ்ரீலங்காவின் முதலாவது சர்வதேச வர்த்தக சந்தையான "எக்ஸ்போ-92" நடக்கவிருந்த வேளை நேற்று தலைநகர் மத்தியில் பெரும் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கடற்படைத் தளபதி பலியானார்.

இக்குண்டு வெடிப்பு "எக்ஸ்போ-92" நிகழ்ச்சி நடைபெறுவதை பெரிதும் பாதித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக கொழும்புக்கு வரும் சுமார் நூறு இந்திய வர்த்தக பிரதிநிதிகள், குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்துக்கு அருகில் இருக்கும் "தாஜ் சமுத்திரா" ஹோட்டலிலேயே தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேஜர் முரளி நினைவு கிண்ண உதைபந்தாட்ட இறுதி இன்று

யாழ் கல்வித் திணைக்களம் தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் — 19 வயதுப் பிரிவில் — இறுதியாட்டமும் மூன்றாம் இடத்தை தெரிவு செய்வதற்கான போட்டியும் இன்று மாலை 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் முதலில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதும்.

தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் கனகரத்தினம் ம. ம. வி. அணி மோதும்.

இன்றைய ஆட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறும் அணிக்கு யாழ் மாவட்ட மாணவ அமைப்புக்குப் பொறுப்பாளராக இருந்து வீரமரணமடைந்த மேஜர் முரளி நினைவு சுற்றுக் கிண்ணம் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வழங்கப்படவிருக்கிறது.

19 வயதுப் பிரிவுக்கான கோட்ட நிலைப் போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட அணிகள் பங்கு பற்றியதும்— இறுதி நிலைப் போட்டிக்கு 24 அணிகள் தகுதி பெற்றதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வடபிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரனும், பங்குபற்றுவர். (உ)

## “ராகிங்” இழுபறிக்கு சுமுகத்தீர்வு:

# மருத்துவபீடாதிபதி மீண்டும் நாளை பதவியேற்பார்

யாழ்ப்பாணம், நவ 17

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி பதவியை இராஜினாமாச் செய்த பேராசிரியா எஸ். பாலசுப்பிரமணியம் தமது இராஜினாமாவை வாபஸ் பெற்று மீண்டும் மருத்துவபீடாதிபதியாக நாளை பொறுப்பேற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமையில் மருத்துவபீடத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உருவான இணக்க நிலையை அடுத்து, மருத்துவ பீடாதிபதி தமது பதவியை மீண்டும் பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவபீடத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் 'ராகிங்' சம்பவங்களை அவர் கடுமையாக எதிர்த்தார் என்பதும்— அதனை அடுத்து ஏற்பட்ட நிகழ்வுகளைத் தொடர்ந்து அவர் மருத்துவபீடாதிபதிப் பதவியை இராஜினாமாச் செய்தார் என்பதும் — தெரிந்தவையே. (உ-3)

## மாவீரர் நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 17

மாவீரர் நாள் தொடர்பாக யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள — தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

சகல விளையாட்டுக் கழகங்களில் இருந்தும் இரு பிரதிநிதிகளும் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவர். (உ)

★ ★ ★

மாவீரர் தினம் தொடர்பாக தனியார் கல்வி நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டங்கள் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறும்

யாழ்ப்பாணம், மருதனார்மடம், வலிகாமப்பு பிரிவுகளுக்கான கூட்டம் யாழ். புதிய விஞ்ஞான கல்விக் கழகத்திலும், தென்மராட்சிப் பிரிவுக்கான கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வடமராட்சிப் பிரிவுக்கான கூட்டம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ)

## இன்றைய உதைபந்தாட்டம்

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ மாதகல் சென் தோமஸ் அணி எதிர் அளவெட்டி விநாயகர் அணி

★ குருநகர் தொடர்மாடி விளையாட்டுக் கழக அணி எதிர் ஊரெழு றோயல் அணி;

## விண்ணப்ப திகதி நீடிப்பு

அரசாங்க நிர்வாக சேவையில் ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது;

இத்தகவலை யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு அறிவித்திருக்கிறார்.

விண்ணப்ப இறுதித் தினம் இம்மாதம் 13 ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

# தமிழீழத் தாயகத்தின் தங்கத் தூண்கள் மாவீரர்

“காய்ந்துபோன ஒரு நெல்மணி தான் ஆயிரம் நெல்மணிகளை உருவாக்குகிறது'' என்கிறது ஒரு பலஸ்தீனக்கவிதை. இதன் பொருளை எமது கண்முன்னே கொண்டுவந்தவர்கள் எம் மாவீரர்கள்.

ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி, ஆயிரம் பல்லாயிரமாய் பல் மாவீரர்கள். தாகம் சுதந்திரத்திற்காகத் தற்கொடைக்குப் பின்னிற்காத மாபெரும் படையணியை தம்மினத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்கள், அன்னைத்தின் கந்தப் பிள்ளைகள், தமிழீழ தாயகத்தின் தங்கத் தூண்கள் —

இவர்களின் இலட்சியக்கனவு எம்மிலிருந்து பிரிக்க

# மாவீரர் நினைவுச் சித்திரம்

இப் பெருநி நிற்கும் விடுதலைப் படையெனும் தோப்பின் வித்துக்கள் மாவீரர்கள்

எமது சந்ததியின் ஒளிமயமான, பாதுகாப்பான எதிர்காலத்துக்கு உத்தரவாதம் அளித்து விளங்குகின்றார்கள் முடியாத கவசகுண்டலம். இவர்தம் நினைவுகள் சுதந்திர யாத்திரையின் வேகத்தை இன்னும் விரைவுபடுத்தி நிற்கின்றன;

எம்மால் நம்பமுடிகிறது. நாளை மலரப்போகும் சுதந்திர தமிழீழத்தை. ✶

# குட்டிமணியின் இறுதி ஆசை; குழப்பிய 'ரெலோ' இயக்கம்!

கொழும்பு, நவ. 17

1983 இனக்கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட குட்டிமணியின் கடைசி ஆசை நிறைவேறாதபடி ''ரெலோ'' செய்துவிட்டது.

—இவ்வாறு ''சண்டே ஐலண்டில்'' நாரகி எழுதிய அரசியல் விமர்சனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரெலோவின் புதிய உதயம் என்ற தலைப்பில் எழுதப்பட்ட இக்கட்டுரையில்—

''குட்டிமணிக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தபோது அவர் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்.

''யாருக்காவது தனது கண்களை தானம் செய்யப்போவதாகவும், அதன் மூலம் ஒரு நாள் தமிழ் ஈழம் பிறப்பதைக் காணப்போவதாகவும் குட்டிமணி தனது இறுதி ஆசையை அக்கோரிக்கையில் தெரிவித்து இருந்தார்.

''குட்டிமணியின் விருப்பம் நிறைவேற்றப்பட முடியாத ஒன்றாகிவிட்டது.

''குட்டிமணி தனது கண்களை தானம் செய்து இருப்பின், அவரது கண்கள், அவரது கட்சியான ரெலோ வடக்கு—கிழக்கு மாகாணத்தைத் தனித்தனி மாகாணங்களாக என்ற நிலைப்பாட்டை ஏற்ற முதலாவது தமிழ்க்குழு என்பதையே கண்டிருக்கும்''— என்று கூறப்பட்டிருக்கிறது;

# அரசு - புளொட் உறவில் விரிசல் ஏற்படும் அறிகுறி

கொழும்பு, நவ. 17

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் அரசு கடைப்பிடித்து வரும் அணுகு முறை குறித்து, அரசுக்கு ஆதரவளித்து வரும் தமிழ்க் குழுக்களில் ஒன்றான புளொட், அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இத்தகவலை ''சண்டே ஐலண்ட்'' வெளியிட்டிருக்கிறது.

புளொட் தலைவர்களில் ஒருவரான திரு. த. சித்தார்த்தன் அண்மையில் அரசுத்துறை பொறுப்பான தொடர்பு ஆலோசகர் ஒருவரைச் சந்தித்து, அவரிடம் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை யெனில் தமது குழு ஆயுதங்களைத் தூக்க நிர்ப்பந்திக்கப்படும் என்று கூறினார் எனவும் ''சண்டே ஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

வவுனியாவுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் வைத்து தமிழ் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதாகக் கூறப்படுவது குறித்தும் புளொட் அதிருப்தி தெரிவித்துள்ளது என்றும் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

புளொட் - அரச உறவில் திருப்பத்தை ஏற்படுத்திய இன்னொரு சம்பவம், வவுனியாவுக்கு அருகில் உள்ள புளொட் முகாமில் வைத்து ''கிளேமோர்'' கண்ணி வெடிகள் மற்றும் ஜொனி குண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கண்ணீர் அஞ்சலி

### தங்கராசா சிவலிங்கம்

(முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை)


10 - 11 - 1992 இல் எம்மை விட்டுப் பிரிந்த ஆற்றலும் அன்புமுடைய திரு: த. சிவலிங்கம் ஐயா அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அவரது குடும்பத்துக்கு எமது உளம் நெகிழ்ந்த மனவருத்தத்தை தெரியப்படுத்துகின்றோம்;

கிளிநொச்சி மக்கள் வங்கி,
முகாமையாளரும், சக ஊழியர்களும்.

(சி-3861)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



வையகம்:
01 – 10 – 1931

()
[]

வானகம்:
18 – 10 – 1992

### அமரர் மாரிமுத்து பொன்னம்பலம்

ஏறுபோல் நடையுடையாய் எழிலுருவே!எம் அண்ணலே
பாயில் படுக்காமல் பத்து நாள் செல்லாமல்
நோயுற்று நீயும் நெந்து மனம் வாடாமல்
மாயக்கடதாசி மடிமேலே விழுந்த தென்ன

பண்பின் உறைவிடமே பாசத்தின் பிறப்பிடமே
பாரெல்லாம் பரிதவிக்கப் பறந்தோடிப் போனதென்ன
ஊரெல்லாம் கூடி ஒப்பலிக்க விட்டு விட்டு
எமையெல்லாம் விட்டு விட்டு ஒருநொடியில் போனதென்ன

உள்ளம் உருகுதைய்யா - எம் அன்பரே
உன்பிரிவால் உடலும் கருகுதைய்யா
உன் கள்ள மற்ற புன்சிரிப்பை நினைக்க
கனலாய்ச் சுடுகுதைய்யா

எம் கண்ணில் நீர் வடிந்தால் ஏந்தலே
உம கண்ணில் நீர் வடியும்
எம் கண்ணில் நீர் துடைக்கும் வள்ளலே
எவிதில் மறைந்ததேனோ?

மாமனார், மைத்துனிமார், பெறாமக்கள்.
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(சி/3854)

## யா / கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை

[தெரிவு செய்யப்பட்ட பாடசாலை]

# பரிசளிப்பு விழா - 1992

இடம் ! பாடசாலை மண்டபம்
காலம்: 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை

நேரம் ; காலை 9-00 மணி

தலைவர்:- திரு. இ. சிவபாதசேகரம், அதிபர்

பிரதம விருந்தினர்:-

திரு சி. வேலாயுதம் அவர்கள்
[பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ் - கோட்டம்]

கௌரவ விருந்தினர்:-

திரு இளங்குமரன் அவர்கள்
[கல்விப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு.]

திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் [உதவி அரசாங்க அதிபர்]
திரு. சி. நடேசபிள்ளை அவர்கள் (உ. கல்விப் பணிப்பாளர்]
திரு. த துரைசிங்கம் அவர்கள் [உ. கல்விப் பணிப்பாளர்]
திரு. வ. தர்மையா அவர்கள் [கொற்றனி அதிபர்)

சிறப்பு விருந்தினர்:-

திரு. இ. பாலசுந்தரம் அவர்கள்
திரு எஸ் ஜே சபாரெத்தினம் அவர்கள்
திரு. செ. சத்தியமூர்த்தி J. P. அவர்கள்
திரு. இ. சிவசுப்பிரமணியம் அவர்கள்
திரு. க. தளையசிங்கம் அவர்கள்
திரு. செ. கோபாலசிங்கம் அவர்கள்
திரு பா சிறிஸ்கந்தராஜா அவர்கள்
திரு. த. பரமநாதன் அவர்கள்
திரு. சு. சுந்தரம் J. P அவர்கள்
திரு. த. தற்குருநாதன் அவர்கள்

பரிசில் வழங்கல்
கலை நிகழ்ச்சி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.

17 - 11 - 1992 (5576)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இந்து நாலகம் யாழ்ப்பாணம்.

# மன்னாரில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்த அரசு முயற்சியாம்

கொழும்பு, நவ 17

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்ப் பிரதேசத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசாங்கம் சகல முயற்சிகளையும் எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்போது மன்னார் நகர் வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும், கடைகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

அரசாங்க அலுவல்களும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

# இரண்டு அமைச்சர்கள் மன்னாருக்கு திடீர் விஜயம்

கொழும்பு, நவ, 17

மன்னாருக்கு மின்சக்தி அமைச்சர் சந்திரபண்டாராவும், வீடமைப்பு நிர்மாண அமைச்சர் சிரிசேன கூரேயும் திடீர் விஜயம் செய்தனர்.

மன்னாரில் சிதைந்துள்ள மின்விநியோகத்தைச் சீரமைக்கவும், பழுதடைந்துள்ள ஐந்து மின் இயந்திரங்களைத் திருத்த இரு பொறியியலாளர்களை அனுப்பி இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன் திருத்தி முடிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக திரு. பண்டார உறுதி அளித்தார்.

நகரின் குடி தண்ணீர் விநியோகத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுப்பதாக திரு. கூரே உறுதியளித்தார். (த-எ)

# ஆண்டு ஒன்று மாணவருக்கு புதிய பாடவிதானம்

ஆண்டு ஒன்று மாணவர்களுக்கான புதிய பாடவிதானம் எதிர்வரும் ஜனவரியில் இருந்து அமுல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹரகமையில் உள்ள தேசிய கல்வி நிலையம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

ஜனாதிபதியினால் முன்மொழியப்பட்ட புதிய கோட்பாடுகளுக்கு அமைய நாட்டின் தற்போதைய தேவைகளை அனுசரித்து ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 13 வரையிலும் மாணவருக்கான பாடவிதானங்களை திருத்தியமைக்கும் பணியை தேசிய கல்வி நிலையம் பொறுப்பேற்றுள்ளது.

நிலையப் பணிப்பாளர் நாயகம் திருமதி திருலோகசுந்தரி காரியவாசம், ஆரம்பக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். எம். குருப்பு ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் புதிய பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தை அமுல் செய்வதற்குத் தேவையான ஆசிரிய ஆலோசகர்களுக்கு இவ்வருட இறுதிக்குள் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சி வகுப்பு டிசம்பர் முதலாம் திகதி மஹரகமையில் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

கிளிநொச்சிக்கு

# பசளை, மண்எண்ணெய்யுடன் வந்த 47 லொறிகள் தடுத்து நிறுத்தம்

## மதவாச்சியில் தரித்து நிற்கின்றன

வவுனியா, நவ. 17

கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு பசளை, மண்ணெண்ணெய் ஆகியவற்றை ஏற்றி வந்த லொறிகள் மதவாச்சியில் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த பத்துத் தினங்களாக 47 லொறிகள் மதவாச்சியில் தாமதித்து நிற்பதால் கிளிநொச்சியில் பசளை வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த லொறிகளின் பற்றுச்சீட்டுகள் படையினரால் கழற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம், வவுனியாவில் இருந்து வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் தற்போது தாண்டிக்குளத்தில் மட்டும் சோதனையிடப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# அன்பளிப்பு வைபவம்

மயிலணி, நவ. 17

வலி. வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு அன்பளிப்புகள் வழங்கும் வைபவம் நாளை காலை 10 மணிக்கு மல்லாகம் பிரதேச செயலகத்தில் நடைபெறும். துர்க்கா தேவி தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் அளித்த நிதியிலிருந்து இவ் அன்பளிப்புகள் வழங்கப்படும். (த-89)

# ராணுவத்துக்கு 10,000 பேர்; சனியன்று நேர்முக பரீட்சை

கொழும்பு, நவ. 17

இராணுவத்துக்கு மேலும் பத்தாயிரம் பேரைத் திரட்ட எதிர்வரும் சனிக்கிழமையில் இருந்து நேர்முகப் பரீட்சை நடத்தப்படவிருக்கிறது.

அநுராதபுரம், குருணாகல், பதுளை, மாத்தறை, மின்னேரியா, கண்டி, பலாங்கொடை, அம்பாறை, தியத்தலாவை, குருவிட்ட ஆகிய இராணுவ முகாம்களில் இந்த நேர்முகப் பரீட்சை திங்கள் வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-எ)

# பாஸ்கரலிங்கம் குறித்து அமைச்சர் ஹமீத் பெருமிதம்!

கொழும்பு, நவ. 17

நிதியமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் பதவியேற்றமை இலங்கைக்கு ஒரு பெருமையான விடயம்.

நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது. (த)

# தெரிவுக்குழுவின் அறிக்கை டிசம்பர் 15 க்கு முன்?

கொழும்பு, நவ. 17

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திரு மங்கள முனசிங்க தலைமையிலான தெரிவுக்குழு தனது அறிக்கையை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு வசதியாக இம்மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் தெரிவுக்குழு தினமும் கூடும் என கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ரெலோ இயக்கமும், ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கமும் தனித்தனியே புதிய யோசனைகளைச் சமர்ப்பித்திருப்பதால் ஏனையோரும் புதிய யோசனைகளை முன்வைக்க இம்மாதம் 20 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# யாழ். சுகாதார திணைக்களம் ஜனவரி முதல் தரம் உயர்வு

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களம் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வடபிராந்திய தலைமை சுகாதார திணைக்களமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று அண்மையில் சுகாதார அமைச்சினால் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுநிருபத்திற்கமைய யாழ். மாவட்டத்தில் உள்ள சாவகச்சேரி, கோப்பாய், பருத்தித்துறை, தெல்லிப்பழை, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சுகாதார திணைக்களப் பணிமனைகள் அனைத்தும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து சுகாதார திணைக்கள ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட விடயங்களை ஜனவரியிலிருந்து வடபிராந்திய தலைமை சுகாதார திணைக்களமே மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# மாவீரர் எழுச்சி வார நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 17

மாவீரர் எழுச்சி வாரத்தின் மூன்றாம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை சிரமதானப் பணிகளும், கருத்தரங்குகளும், கலை நிகழ்ச்சிகளும் கோட்ட ரீதியாக வட்டவைப் பிரிவுகளில் நடைபெறவுள்ளன.

கருத்தரங்குகள் வழமை போல் மாலை வேளையில் வெவ்வேறு நேரங்களில் இடம்பெறும். விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் தலைமை உரையும், எழுச்சி உரைகளும் அவற்றில் இடம்பெறும்.

சிரமதானப் பணிகளில் பொது மக்கள் பொது நிதா பணிகள் உட்பட பல்வேறு துறையினரும் கலந்து கொள்வர்.

கருத்தரங்குகள்

கோப்பாய் வட்டத்தில் ஆவரங்கால் மத்திய ச. ச. நிலையத்திலும், தெல்லிப்பளை வட்டத்தில் அளவெட்டி ச. ச. நிலையத்திலும், யாழ் வட்டத்தில் சற்குணம் கொட்டடி வீரர் ச. ச. நிலையத்திலும், நல்லூர் வட்டத்தில் சந்தர்மடம் அத்திருடி கலைமகள் ச. ச. நிலையத்திலும் —

கரவெட்டி வட்டத்தில் அண்ணா சிலையடி மணியரசன் பாடசாலையிலும், கைதடி வட்டத்தில் கைதடி வடக்கு ச. ச. நிலையத்திலும், கொடிகாமம் வட்டத்தில் மந்துவில் குட்மன் ச. ச. நிலையத்திலும் —

பளை வட்டத்தில் முகமாலை பாடசாலையிலும், சாவகச்சேரி வட்டத்தில் தேன்மொழி பாலர் பாடசாலையிலும் —

தீவகக் கோட்டத்திற்கான கருத்தரங்கு வேலணை மண்டிதர் குடியிருப்பு வட்டத்தில் அல்லாலை மணியரசன் குடியிருப்பிலும், டபள் முகாமிலும் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரின் கருத்தரங்கு பண்டத்தரிப்புக் கோட்டத்தில் சண்டிலிப்பாய் சமரசை கலைப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெறும்.

கடற் புலிகள் நடத்தும் எழுச்சிக் கருத்தரங்குகள் இன்று பின்வரும் இடங்களில் நடைபெறும்:

★ தாளையடியில் — செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை.

★ வலிகாமம் வடக்கு வட்டத்தில் — மூளாய் பிள்ளையார் கோவிலடி.

★ வடமராட்சி வடக்கு வட்டத்தில் — நெடியகாடு மடத்தடி, பொலிகண்டி மேற்கு மடத்தடி.

★ வலிகாமம் கிழக்கு வட்டத்தில் — இருநகர் ச. ச. நிலையம், சென். றோக் ச. ச. நிலையம், குருநகர் ச. ச. நிலையம்;

இன்றைய சிரமதானங்கள்

★ தீவகக் கோட்டத்தில் அல்லாலை மணியரசன் குடியிருப்பில் முகாம் சுத்திகரிப்பும் வடிகால் அமைப்பும், டபள் முகாமில் முகாம் துப்புரவும், வடிகாலமைப்பும்.

★ கட்டைவேலி வட்டத்தில் மாணிக்கவாசகர் பாடசாலையில் சிரமதானம்.

★ சங்கானை வட்டத்தில் அராலி வடக்கு ச. ச. நிலைய வீதி சீரமைப்பு.

★ கோப்பாய் வட்டத்தில் முஸ்தப்பா வீதி, பிரியதர்சினி வீதி புனரமைப்பு.

★ சண்டிலிப்பாய் வட்டத்தில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் சிரமதானம்.

★ உடுவில் வட்டத்தில் சுன்னாகம் திலபள் முகாமிலும், சந்தரோடை வீதியிலும் சிரமதானம்.

★ நல்லூர் வட்டத்தில் கோண்டாவில் கிழக்கு மயானம் துப்புரவு.

★ கடற்புலிகளின் ஏற்பாட்டில் வலிகாமம் கிழக்குவட்டத்தில் துண்டி வீதி மகேந்திரபுரம், எழிலூர் வீதிகள் செப்பனிடப்படும். புனித அந்தோனியார் ச. ச. நிலையம், நினைவுத் தூபி சுற்றாடல் மற்றும் கடலோரம் துப்புரவு செய்யப்படும். ஈச்சமோட்டை ச. ச. நிலைய சுற்றாடல் துப்புரவு செய்யப்படும்.

★ கடற்புலிகளின் ஆதரவுடன் வடமராட்சி கிழக்கு வட்டத்தில் மருதங்கேணி இந்து வித்தியாலய சுற்றாடல், செம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலை சுற்றாடல், ஆழியவளை சி. சி. த. க. பாடசாலை சுற்றாடல், வெற்றிலைக்கேணி றோ. க. பாடசாலை சுற்றாடல் ஆகிய இடங்களில் சிரமதானமும் இடம்பெறும். (த-5)

## மாவீரர் நாள் - 1992

மாவீரர்களே!

உங்களின் நினைவுடன் தலைவன்
தலைவனின் வழியினில் புலிகள்
புலிகள் மக்களே மக்கள்
மக்களே விடுதலைப் புலிகள்!

- தமிழீழ மாவீரர் பணியகம்


வெளியீட்டு விழா

★ வணிகச்சுடர் ★

நேரம்: முற்பகல் 9 மணி

காலம்: 18 — 11 — 1992 (புதன்கிழமை)

பிரதம விருந்தினர்: திரு. சி. வேலாயுதம் (யாழ். கோட்டக் கல்வி அதிகாரி)

சிறப்பு விருந்தினர்: திரு. சி. சிவராசா (உதவிக் கல்விப்பணிப்பாளர், வர்த்தகம்)

பழைய மாணவர்கள், பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வணிக மன்றம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(இ-3783)



இயந்திர இயக்குநர் (Machine Minder)

போதிய அனுபவமும், திறமையும் உள்ள பிளேட்டின் அச்சு இயந்திர இயக்குநர் உடன் தேவை. தகுதிப் பத்திரங்கள், நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் பணிமனை,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8860)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனையாகின்றது

எமது விலாசமிடப்பட்ட ஓவ்செற் பெரிய கலண்டர்கள் ரூபா 15/-க்கு விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[23188]

எம்மிடம் மூன்று அளவுகளில் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. படங்கள் தனியாகவும், இலிப் தனியாகவும் பெற விரும்புவர்கள், எம்மிடம் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும், ஸ்ரீ காந்தா அச்சகம் - புத்தகசாலை.
[23189]

## இலவச திருமண சேவை

35 வயது, அனுசம், படித்த பெண்ணுக்கு கௌரவமான குடும்பத்திற் மணமகன் தேவை; தகுதிக்கு ஏற்ப சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஞானிறு சாலையில். து விமலா, யாழ்; நாச்சிமார், கோவிலடி.
[23286]

31 வயது, உத்திரட்டாதி, செவ்வாய், கிரகமாலைற்ற என்ஜினியருக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. மத்திய கிழக்குக்கு திருமணமாகி அழைத்துச் செல்வார். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[23292]

## சங்கீதம்

எதிர்வரும் வகுப்பேற்றத் தேர்வில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்றது சங்கீதம் வினா-விடை. ஆக்கம்: திருமதி நா. சுதாமணி சிவானந்த சர்மா.
[23274]

## இரசாயன நூல்கள்

திரு. மகாதேவா அவர்களின் அசேதன இரசாயனம், பௌதிக இரசாயனம், புள்ளி ஆகிய நூல்களை எம்மிடம் பெறலாம் சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.
[5574]

## M. L. T. தேவை

பிரபல தனியார் வைத்தியசாலைக்கு உடனடியாக அனுபவமிக்க வைத்திய ஆய்வு கூட நுண் கலைஞர்கள் (M. L. T.) தேவை. நேரடியாக சான்றிதழ்களுடன் இல. 17, கண்டி வீதி, சண்டிக்குளி, யாழ்ப்பாணத்திலுள்ள விக்கியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்-நிர்வாகம்.
[23291]

# அன்பளிப்பு

கொழும்புத்துறை, நவ. 17
யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை யாழ். மாநகரசபை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.
சனசமூக நிலையங்கள் சமாசத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்தே இவ் அன்பளிப்பு வழங்கப்பட்டது. [த-30]

# சேதம்

கொழும்பு, நவ. 17
சூறாவளி காரணமாக மட்டக்களப்பு மின்சாரசபைக்குச் சொந்தமான பத்து லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதமடைந்தன என்று அறிவிக்கப்படுகின்றது.
[த-எ]

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
20 — 07 — 1984

ஆண்டவன் மடியில்:
20 — 11 — 1989

திதி:
17 - 11 - 1992

செல்வி
## சித்திரகலா அமரசேனாதிபதி

மலர்ந்தும் மலராத பாதி
மலர் போல மறைந்த
இளந்தென்றலே - நம்
மனதில் எந்நாளும்
மாறா எழிலோடு
சிரிக்கும் சித்திரமே
சுவர்தான் மறைந்தாலும்
சோகம் சூழ்ந்தாலும்
சித்திரம் மறையவில்லை - உன்
சுந்தரம் குறையவில்லை
மந்திரமாய் எங்கள்
மனங்களில் தவழும்
மகளே நீ வாழி - தங்கத்
தமிழே நீ வாழி!

உமது பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, ஆசை அண்ணா,
அப்பாச்சி, அம்மாச்சி, குடும்பத்தினர்.

"சுதா வனம்",
மயிலிட்டதனை,
தொண்டமனாறு.
[23251]

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்:
03
04
1969



விண்ணில்:
17
11
1988

## சங்கரப்பிள்ளை சத்தியதேவன்

திதி: 17 — 11 — 1992

அன்பு மகனே! நீ மறைந்து ஆண்டுகள் நான்கு சென்றாலும் கண்ணில் நீர் வற்றவில்லை. காலமெல்லாம் அழுதாலும் கவலையோ தீரவில்லை, அப்பனே! உடன்பிறப்பை உறுதியுடன் காப்பேன் என்றாய்; பிறநாடு சென்று பேதலித்து வந்தாய்; பட்ட கடன் எங்கே? பாங்கான நினைவெங்கே? பெற்ற கடன் தீர்க்கும் பெருமகனின் நினைவெங்கே? வெருந்துன்பங்கள் நிறைந்த வாழ்வைத் தூய்மைப்படுத்த எண்ணி தொடர்ந்த துன்பங்களையும் துணிவோடு ஏற்றுக் கொண்டாய்; தேவன் உருவில் வந்த சத்தியதேவனையும் காலன் கவர்ந்து விட்டான்; மகனே! எங்களை ஆறாத் துயரில் நிதம் அழுந்தக் கலக்கி விட்டு, மீளாத் துயில் கொண்டாய்; நிலை மாறாச் சூரியன் உதிக்க மறந்தாலும் உன் நினைவை என்றும் மறவோம்.

உத்தமனே உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, சகோதரர்,
குடும்பத்தினர், உறவினர்கள்.

மாதகல். [23300]

# திவ்வியநாதன் எம். பி. மீது ரெலோ நடவடிக்கை!

கொழும்பு, நவ. 17
அம்பாறை மாவட்ட ரெலோ எம். பி திரு. ஆர். திவ்வியநாதனுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ரெலோ அமைப்பு தீர்மானித்துள்ளது; இதனை ரெலோ பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.
கடந்த சில மாதங்களாக திரு: திவ்வியநாதன் ரெலோ அமைப்பின் கொள்கைகளுக்கு மாறாகச் செயற்பட்டு வருகின்றார் என்றும்— பொதுக் கூட்டங்களில் பேசி வருகின்றார் என்றும் அப்பேச்சாளர் சொன்னார்.
இதன் காரணமாகவே இவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (த-எ)


# அடையாள அட்டைப் படம்

தேசிய அடையாள அட்டைப் படம் பிடிக்க ரூபா 40/-
விரைவாக வழங்கப்படும்.

## குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.
[சி-3859]


# VACANCY

## POST OF ACCOUNTS CLERK

Applications are Called for the Post of Accounts Clerk at Green Memorial Hospital, Manipay.

**Qualifications:**

G. C. E. O/L in One Sitting with Credits in Mathematics, English and Accounts and or G. C. E. A/L Pass in 4 Subjects with "Accounts" as a Subject and a Pass in Book-keeping, I. A. B. (London) Preferable.

**Age:** Between 35 — 50 years

**Salary Negotiable:**

Apply to Medical Superintendent Green Memorial Hospital, Manipay on or before 30th November 1992.

(C-3782)

# 11ஆவது நினைவஞ்சலி



## ஸ்ரீமான் வே. தம்பு

B. Sc. (Hons. Lond.) P. G. T.
(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்:
18 — 10 — 1912

மறைவு:
17 — 11 — 1981

அன்னாரை அன்புடன் நினைவு கூரும்:
தம்பை, மருமக்கள்,
பேரமக்கள்.

புது வீடு,
அளவெட்டி. [23289]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைப் போராளியின் கொள்கை

# தீவிரத்திலிருந்து எவரும் தப்ப இயலாது

## குண்டு வெடிப்பு எடுத்துக் காட்டுவது அதனையே

கடற்படைத் தளபதி கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து பி.பி.ஸி. நேற்று வழங்கிய விமர்சனத்தை இங்கே படியுங்கள்!

கடந்த பத்து வருடங்களில் விடுதலைப் புலிகளினால் கொலையுண்ட ஆயுதப்படை அதிகாரிகளில் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவே மிக உயர் பதவி வகித்தவராவார்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் ஆயுதப்படைகளைச் சேர்ந்த ஓர் உயர் அதிகாரியும் மற்றும் எட்டு அதிகாரிகளும் அராலியில் குண்டு வெடிப்பில் கொலையுண்ட பின்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விரக்தி நிலைக்குப் போய் விட்டனர். நேற்றைய சம்பவம் அவர்கள் மத்தியில் மேலும் விரக்தியை வளர்க்கும்.

நாட்டின் பாதுகாப்பு உயர் பீடத்துக்கு அருகிலும் தமது தாக்குதல்களை நடத்த முடியும் என்று விடுதலைப் புலிகள் மீண்டும் நிருபித்து விட்டார்கள்.

கொழும்பு கடற்கரையை ஒட்டியுள்ள காலிமுக மைதானத்துக்கு அருகில் — இராணுவ தலைமைப்பீடம் அமைந்துள்ள பகுதியில் — கொழும்பில் நிர்வாகத் தலைமைப்பீடம், நிர்வாகச் செயலகம், நட்சத்திர ஹோட்டல்கள் அமைந்த பகுதியில் — கடற்படைத் தளபதி பெர்னாண்டோ கொல்லப்பட்டுள்ளார்.

தலைநகரில் ஒரு தாக்குதல் நடக்கவிருக்கிறது என்ற வதந்திகள் பரவிய நாள் தொடக்கம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் —

வீதிகள் பல மூடப்பட்டு, இராணுவ அதிகாரிகளின் கார்களுக்கு இருமருங்கிலும் பொலிஸ் பாதுகாப்பு வீரர்கள் பயணம் செய்தும்கூட இந்த தாக்குதலை தவிர்க்க முடியவில்லை.

தற்கொலைக் கொலையாளி ஒருவரின் கொள்கைத் தீவிரத்தில் இருந்து யாருக்குமே பாதுகாப்பு வழங்குவது இயலாத காரியம், எவ்வளவு சிரமமானது என்பதை இச்சம்பவம் நிரூபித்திருக்கின்றது.

### புலிகளின் சிலர்

தமிழீழக் கொள்கைக்காக உயிரிழக்கத் தயாராக விருப்பது — குறிப்பாக தற்கொலை செய்யவும் தயாராக இருப்பது — தமிழீழ புலிப்படையினர் கடைப்பிடித்து வரும் தலையாய சீலமாகும்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த ஆண்டு மே மாதம் தற்கொலைக் கொலையாளியான இளம் பெண் ஒருவர் சுமந்து வந்த குண்டினால் கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் புலிப்படையினரே காரணம் என்று பரவலாக சந்தேகிக்கப்படுகிறது.

புலிப்படையினரின் தலைவர்கள் மட்டுமல்ல, சாதாரண புலிப்படையின் உறுப்பினர்கள் கூட பிடிபட்டதும் வாயில் போட்டு விழுங்குவதற்கு தயாராக 'சயனைட்'' குப்பிகளை கொண்டு திரிவதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் போர் இன்று எங்கோ தொலைவில் உள்ள வடக்கிலோ, அல்லது கிழக்கிலோதான் நடைபெற்று வருகின்றது என்ற எண்ணத்தை புலிப்படையினர் தமக்கு சாதகமாக பயன்படுத்தி, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினாவை கடந்த வருடம் மார்ச் மாதத்தில் தலைநகரில் கொன்றார்கள்.

மூன்று மாதங்களின் பின்னர் புலிப்படையினரின் குண்டு ஒன்று பாதுகாப்பு தலைமையக பணிமனையைத் தாக்கி இராணுவ வீரர்கள் பலரின் உயிரைக் குடித்தது.

### பெரிதுபடுத்த விருப்பமில்லை

நேற்றைய தாக்குதலை பெரிதாகக் காட்ட அரசாங்கம் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கிறது என்றும், இது ஒரு தனிப்பட்ட பயங்கரவாதச் சம்பவம் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால் உண்மையில் தளபதி பெர்னாண்டோவின் கொலை, கொழும்பில் இராணுவத்தில், அரசாங்கத்தில், வர்த்தக வட்டாரங்களில் எல்லாம் பெரும் அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

வர்த்தகர்கள் நாட்டின் மீது வைத்துள்ள நம்பிக்கை இதனால் பாதிக்கப்படும்.

கொலை நடந்த சிலமணி நேரத்தில், ஜனாதிபதி பிரேமதாசா வெளிநாட்டு மூலதனத்தை ஏற்கும் முக்கிய உரை ஒன்றை திட்டமிட்டபடி இன்று (திங்கள்று) நிகழ்த்தினார்.

### எதுவும் கூறவில்லை

வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்பட்ட இந்த உரையில் குண்டுத் தாக்குதல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை

இலங்கையின் முதலாவது ஏற்றுமதிக் கண்காட்சிக்காக சுமார் மூவாயிரம் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இவ்வாரம் கொழும்புக்கு வந்து குவிந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3)

## விடுதலைப் புலிகள் இயக்க தீவிர உறுப்பினர் கொழும்பில்

### ஞாயிறு வெளியான செய்தி

கொழும்பு, நவ. 17

ஈ.பி.ஆர்.எல்.எவ். மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பி. சாம்தம்பி முத்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தீவிர உறுப்பினர் ஒருவர் கொழும்பு மாநகருக்குள் பிரவேசித்துள்ளார் என்றும் —

இவர் கொட்டாஞ்சேனைப் பகுதியில் நடமாடக் காணப்பட்டார் என்றும் —

பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி சண்டே டைம்ஸ் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டிருந்தது

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நலன்களுக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுபவரை இலக்கு வைத்தே இந்த நபர் கொழும்பு வந்திருக்கலாம் என்றும் அந்த வாரஇதழில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு மாநகரில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குழுவுடன் (Cell) இவர் தொடர்பை ஏற்படுத்தி இருக்கக் கூடும் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன

இவரைப் பிடிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் — அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது

## உயிரிழந்த கடற்படை தளபதி அட்மிரலாக பதவி உயர்வு

கொல்லப்பட்ட வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ இறந்த பின்னர் அட்மிரலாக பதவியுயர்த்தப்பட்டார்.

கடந்த ஆண்டு நவம்பர் முதலாம் திகதி கடற்படைத் தளபதியாகப் பதவியேற்ற — 53 வயதான — பெர்னாண்டோ அடுத்த வருடம் ஓய்வு பெறவிருந்தார்.

1957 இல் கடற்படையில் கடேற் அதிகாரியாகச் சேர்ந்த இவர் பாகிஸ்தானிலும் பிரிட்டனில் உள்ள றோயல் பிரிட்டிஷ் கடற்படைப் பயிற்சிக் கல்லூரியிலும் புதுடில்லியில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியிலும் பயிற்சி பெற்றவர்.

பட்டப்படிப்பு மற்றும் முதுமாணிப் பட்டம் பெற்ற ஒரே ஒரு கடற்படை அதிகாரியாகவும் அவர் விளங்கினார்.

1992 ஆம் ஆண்டு ஆனையிறவு — கட்டைக் காட்டில் நடந்த ''பலவேகய-2'' இராணுவ நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியில் துருப்புக்களை இறக்கும் நடவடிக்கைகளுக்கு தலைமைதாங்கி, வழிநடத்தியவர் கிளான்ஸி பெர்னாண்டோ என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வேளை கடற்படையின் 10 ஆயிரத்து 390 துருப்புக்களுக்கு அவர் பொறுப்பாகவிருந்தார். (உ-எ-8-6)

## உல்லாசப் பயணிகள் வருகையும் குறையுமாம்!

ஸ்ரீலங்காவின் உல்லாசப் பயணத்துறை சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கும் வேளையில் நேற்றைய குண்டு வெடிப்புத் தாக்குதல் அதனை மழுங்கடித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது:

குண்டுத் தாக்குதல்கள் போன்றவற்றுக்கு அஞ்சி உல்லாசப் பயணிகள் ஸ்ரீலங்காவுக்கு வருவதை நிறுத்திக் கொள்வர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது (உ-3)

## தகவல் தெரிந்திருந்தும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலும் கூறப்பட்டது.—

ஏன், பிரதம மந்திரியும் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் அதனை உறுதி செய்தார். —

இத்தனைக்கும் மத்தியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன; ஆனால் எல்லாவற்றையும் மீறி தலைநகரில் குண்டு வெடித்து விட்டது. —

இத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளினாலும் என்ன பலன்? — இவ்வாறு விமர்சகர்கள் பலரும் கேள்வி எழுப்பி உள்ளனர். (அ-உ)

## நியூஸிலாந்து அணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றுவதற்காக நியூஸிலாந்து அணி கண்டிக்குப் புறப்படவிருந்த வேளையில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது குண்டுவெடிப்பால் நியூஸிலாந்து அணியினர் தங்கியிருந்த ஹோட்டல் அதிர்ந்தது.

இதனை அடுத்து நியூஸிலாந்து அணிக்குப் பொறுப்பான அதிகாரிகள் கொழும்பில் உள்ள தமது தூதரக அதிகாரிகளுடனும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகளுடன் தீவிர ஆலோசனை நடத்தினர். அதன் பின்னர் சுற்றுப் பயணம் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது:

குண்டுவெடிப்பின் காரணமாக அணியிலுள்ள சகல விளையாட்டு வீரர்களும் கதி கலங்கி பயந்த நிலையில் உள்ளனர். என்று குழுவின் முகாமையாளர் தெரிவித்தார்.

கடந்த 1987 ஆம் ஆண்டிலும் — கொழும்புக்கு வந்திருந்த நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினர் அப்போது கொழும்பு புறக்கோட்டையில் இடம்பெற்ற பெரும் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றை அடுத்து — ஒரு டெஸ்ட்டுடன் மட்டும் விளையாடி முடித்துக் கொண்டு — தமது சுற்றுப் பயணத்தை இடைநடுவில் ரத்துச் செய்து நாடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (உ-எ-3 6)

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, நவ 17

இந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று திங்கள் கொழும்பில் வெளியாவதாக இருந்தன.

இப்பரீட்சைக்கு 3லட்சத்து 40 ஆயிரத்துக்கு அதிகமான மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

## ஈழ அகதிகள் ஐவர் பலி!

கடந்த வார இறுதியில் தமிழ்நாட்டில் இடம்பெற்ற சூறாவளி, வெள்ள அனர்த்தங்களின் போது அங்கு தங்கியிருந்த ஈழத் தமிழ் அகதிகளில் ஐவர் பலியாகினர் என்று ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது

தமிழகத்தில் சூறாவளி, வெள்ளத்தினால் சுமார் 135 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (உ-3)

## குண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது:

ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி கொல்லப்பட்ட செய்தியை அறிவித்த பல வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகள் தாக்குதலுக்கு புலிகளே காரணம் என்று குறிப்பிட்டன. ... டது.

## 3 இந்தியர் உட்பட 6 பேர் தடுத்து வைப்பு

கொழும்பு, நவ. 17

யாழ் குடா நாட்டுக்குள் எரிபொருள் கடத்தி வர முயற்சித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 இந்தியர்கள் உட்பட ஆறு பேரை ஸ்ரீலங்கா கடற்படையினர் கைது செய்து மன்னாரில் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது

கடந்த வாரம் இந்த ஆறு பேரும் கைது செய்யப்பட்டு மன்னாரில் உள்ள படைத் தளபதியிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பாதிப்பு

கொழும்பு, நவ. 17

கடந்த வியாழக்கிழமை வீசிய சூறாவளியில் 14 ஆயிரத்து 977 குடும்பங்கள் பாதிப்படைந்தன.

## வவுனியாவில் பதற்றம்

மன்னா, நவ 17

நேற்று வவுனியா நகரில் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் இருந்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

புலிகள் வாகனமொன்றில் மறைத்து வைக்கப்பட்ட குண்டு ஒன்றை வவுனியாவுக்குள் கொண்டு வந்திருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டனர் என்றும் —

கடைகள், வாகனங்களிலும் தீவிர சோதனை நடத்தப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## உதயன்

### பொரிமாத் தோண்டிகள்!

ஸ்ரீலங்கா அரசாங்கம் ஆயுதக் கொள்வனவில் இன்னொரு சுற்று ('றவுண்ட்') ஓடவுள்ளது!

ஆர்ஜென்ரீனாவிடம் இருந்து போர் விமானங்களையும், போர்க் கருவிகளையும் ஸ்ரீலங்கா பெரும் பணச் செலவில் வாங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இவற்றைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாகப் பேச்சுக்கள் நடத்த இங்கிருந்து ஒரு குழு சென்றிருந்தது. பேச்சுக்கள் சாதகமாக அமைந்ததால் இப்போது ஆர்ஜென்ரீனாவில் இருந்து பிரதிநிதிகள் இங்கு வந்துள்ளார்கள்.

அதே போல, பிரான்ஸிடம் இருந்து யுத்த ஹெலிகொப்டர்களை வாங்கவும், அதிவேகக் கடற்படைக் கப்பல்களை வாங்கவும் அவற்றை இங்கேயே கட்டக்கூடிய தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியைப் பெறவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் செய்திகளைப் படிக்கும் எவரும் ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தைத் தொடர்வதில் அக்கறையாகவும், ஆர்வத்துடனும் செயற்படுவதை உணர்ந்து கொள்வர்

யுத்தச் செலவு ஏற்கனவே உப்பிப் பெருத்துப் போய் இருக்கிறது. யுத்தத்தை நிறுத்தினால், அதற்கென வருடாந்தம் செலவாகும் 2 000 கோடி ரூபாவை அபிவிருத்தி வேலைகளுக்குச் செலவிடலாம் என்று ஜனாதிபதி சொன்னார். 1,200 கோடி ரூபாவை மிச்சப்படுத்தி நாட்டை வளப்படுத்துவதுடன் வெளிநாட்டு மூலதனத்தைத் தருவிக்கலாம் என்று நிதி அமைச்சரும், பிரதம மந்திரியுமான விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இரண்டு ''பெரிய தலைகளும்'' யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும், பாதுகாப்புச் செலவைக் குறைக்க வேண்டும் என்று கூறியபோதிலும், இன்னொரு சுற்று ஆயுதக் கொள்வனவுக்கு ஆயத்தம் செய்யப்படுகிறது. இதன் அர்த்தம் என்ன? படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்ற பாவ வினையில் ஈடுபடுகிறார்கள் என்பதேயாகும்!

முன்னர் பல ''றவுண்டு'' களில் கோடானு கோடி ரூபாவைச் செலவிட்டு நவீன போர்க் கருவிகளையும், யுத்த தளபாடங்களையும் வாங்கினார்கள். அவற்றைப் பயன்படுத்தி யுத்தத்தில் வென்று விடலாம் என்று மனப்பால் குடித்தார்கள். பல தடவைகளில் அவர்களின் வெற்றி எதிர்பார்ப்புகள் கனவுகளாகிய போதிலும் இன்னும் சுயபுத்தி வந்ததாக இல்லை!

அதனாலேயே, தொடர்ந்தும் போர்த் தளபாடங்களையும், கருவிகளையும் வாங்குவதில் நாட்டின் பணத்தையும் தமது நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். போரில் வெல்வதற்கு ஆயுதங்களும் தளபாடங்களும் இருந்தால் போதுமா? வீரத்துடனும், மனத்திடத்துடனும், தியாக உணர்வுடனும் போராடக்கூடிய வீரர்கள் இருந்தால் மட்டுமே போரில் வெல்வது சாத்தியம்.

எவ்வாறெனினும் தமிழர்களின் அரசியல் விடுதலைக்காக தம் இன்னுயிரை ஈந்து எங்கு சென்றும், எதனையும் சாதிக்கக் கூடிய விடுதலைப் புலிகளை வெல்வது என்பது பகற்கனவாகும்; மக்களின் ஆதரவைப் பெற்ற அவர்களை வெல்வதற்கு இன்னும் இரண்டரை வருடங்கள் சென்றாலும் அரசினால் இயலாது வேண்டுமானால் தமிழர்களை முற்றாக அழித்த பின்னர் தான் அது சாத்தியப்படும்

கொழும்பில் நேற்று நடந்த சம்பவத்தில் இருந்தாவது அரசாங்கம் இனப்பிரச்சினைக்குப் போர் ஒரு தீர்வைத் தராது என்பதை உணரவேண்டும். இல்லையேல் சிங்களத் தலைவர்கள் பொரிமாத் தோண்டிகள் ஆகிவிடுவர்.

## ஜனாதிபதி வீரவணக்கம்

உயிரிழந்த கடற்படைத் தளபதியின் மரணம் தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்த அறிக்கையில் தளபதிக்கு தாம் வீரவணக்கம் தெரிவிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது; (உ-8)

## மழையின்றேல் வளமில்லை மரமுண்டேல் மழையுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலுக்கு முன் அரசு - புலிகள் உடன்பாடு வரும்?

கொழும்பு, நவ. 17

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் வெற்றிகரமான உடன்பாடு ஒன்றைக் காணும் சாத்தியம் உண்டு.

— இவ்வாறு ஞாயிறு "ஐலண்ட்" பத்திரிகையில் ஷமிந்திரா பெர்டினண்டோ எழுதிய அரசியல் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு காணுவது, மாகாண சபைத் தேர்தலில் எதிர்கட்சிகளுக்கு எதிராகத் தன்னிடம் உள்ள வளங்கள் அனைத்தையும் பாவிக்க ஆளும் கட்சிக்கு உதவும் என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## சிற்றூழியர், சாரதிகள் அரச சேவைக்கு சேர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

அரச மற்றும் மாகாண கூட்டுத்தாபன சேவைகளுக்கு சிற்றூழியர்களையும் சாரதிகளையும் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அக்டோபர் 30ஆம் திகதிய வர்த்தமானியில் இது சம்பந்தமான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறும் என்றும் —

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசித் தினம் இம்மாதம் 30ஆம் திகதி என்றும் அறிவிக்கப்படுகிறது. (உ-5)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி மெரிஸி அஞ்சலா (அ. கா.)

அருட் சகோதரி மெரிஸி அஞ்சலா (அ. கா) 13-11-1992 இல் கொழும்பில் காலமானார். இவரின் நல்லடக்கம் பொறளை கார்மேல் சவேரியர் மடத்திலிருந்து திருப்பலியின் பின் கனத்தை மயானத்தில் நடைபெற்றது.

இவர் கே. எஸ். இராசையா அன்னம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரியாவார். இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 17-11-1992 செவ்வாய்க்கிழமை மாலை 4-45 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு பற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி கே. எஸ் இராசையா (ஜே பி)

தாளையடி.

(23290)

### திருமதி தங்கரத்தினம் வேலுப்பிள்ளை (உரும்பராய்)

உரும்பராய் தெற்கு தங்கவேல் மாளிகையைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் வேலுப்பிள்ளை நேற்றுக்காலை 6-30 மணியளவில் காலமானார். வியாங்கொடை பிரபல வர்த்தகராகத் திகழ்ந்த அமரர் வரணியூர் க. நாகு வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியாரும், காலஞ்சென்ற செல்லையா செல்லம்மா தம்பதியினரின் அருமை மகளும், திரு. சண்முகநாதன், திருமதி நாகபூஷனி, திரு. கணேசநாதன் (ஹற்றன் நஷனல் வங்கி-கொழும்பு), திரு. சிவநாதன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. சிவலிங்கம் (இளைப்பாறிய உதவி ஆணையாளர் - சமநல சேவை), திரு. பஞ்சலிங்கம் ஆகியோரின் பிரியமான சகோதரியும், திருமதி சுந்தரராணி, திரு. நாகரத்தினம் (இலங்கை வங்கி- ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), திருமதி ஆனந்தி (திறைசேரி-கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிஹரன் (கொழும்பு), சிவாஹரன், அங்கவை, சங்கவை, நிரோஷன், நிஷாந்தன், நிரந்தரி, பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் மரணச்சடங்கு 16-11-92 திங்கள் பிற்பகல் உரும்பராயில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வேண்டப்படுகின்றார்கள்.

தகவல்:
வே. சண்முகநாதன் (மகன்)

தங்கவேல் மாளிகை,
உரும்பராய்.

(23288)

### சபாபதிப்பிள்ளை பற்குணராசா (ஓய்வுபெற்ற யாழ் போதனா வைத்தியசாலை-மேற்பார்வையாளர்)

யாழ்ப்பாணம் அத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஓட்டுமடத்தை வதிப்பிடமாகக் கொண்டவருமான சபாபதிப்பிள்ளை பற்குணராசா 15-11-1992 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், முருகதாஸ், விக்னேஸ்வரதாஸ், ஹரிதாஸ், ரமணதாஸ் (யோகா பெயின்ற் ஹவுஸ் உரிமையாளர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகதாஸ் சாரதா, விக்னேஸ்வரதாஸ் தேசமல்லிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகதாஸ், சுகிதாஸ், சுமனதாஸ், சிவானி, நிரோசதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-11-1992 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. விக்னேஸ்வரதாஸ் (மகன்)
இ. நடராசா (மைத்துனர்)

232/1 செட்டியார் லேன்,
மானிப்பாய் றோட்,
ஓட்டுமடம்.

(23295)

### திருமதி மயில்வாகனம் நல்லம்மா

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் நல்லம்மா சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு மயில்வாகனத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, அன்னலட்சுமி, நாகரத்தினம், சண்முகநாதன், யோகராசா (பங்காளர், அம்பிகா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி), பூபாலராசா இரத்தினமலர் (Canada), குணநேசன் (பங்காளர், அம்பிகா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரன், இராசையா, அம்பிகைபாகன் (உரிமையாளர், அம்பிகா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி), சிவானந்தன் (Canada), பரமேஸ்வரி, ஜெயலட்சுமி, கமலாதேவி, கனகலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், பொன்மணி, செல்லம்மா, செல்வரத்தினம், காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-11-92) 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ம. சண்முகநாதன் (மகன்)

முத்தட்டு மட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(5579)

விமானத் தாக்குதல் நடத்துவது சம்பந்தமான

# விமானப்படைத் தளபதியின் அதிகாரம் பறிக்கப்பட்டது!

## பாதுகாப்பு உயர் அதிகாரிகளிடையே குத்து வெட்டு!

கொழும்பு, நவ. 17

விமானத் தாக்குதல்களை நடத்தும் அதிகாரம் விமானப் படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனாவிடம் இருந்து அகற்றப்பட்டு, பிரதித் தளபதியான ஒலிவர் ரணசிங்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சிறில் ரணதுங்க, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சுச் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ ஆகியோரின் இணக்கத்துடன் கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இந்த முடிவை எடுத்துள்ளதாக "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

விமானத் தாக்குதல் நடத்தப்படும் இடங்களைத் தெரிவு செய்து அடையாளங்காணுவது—

பின்னர் அவற்றை அழிப்பது—

ஆகிய நடவடிக்கைகளுக்கு பிரதித் தளபதியான ஒலிவர் ரணசிங்கா பொறுப்பாக இருந்து செயற்படுத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. ஒலிவர் ரணசிங்கா தற்போது விமானப் படையின் தலைமை அதிகாரியாக (Chief of Staff) இருந்து வருகின்றார்.

இந்த மாற்றம் குறித்து விமானப் படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா, பிரதித் தளபதி ஒலிவர் ரணசிங்கா முன்னிலையில் கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் வனசிங்காவிடம் தமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால்—

ஜெனரல் வனசிங்கா எதிர்காலத்தில் விமானப்படை மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி ரெறன்ஸ் குணவர்த்தனாவிடம் விளக்கினார் என்றும் —

ஒலிவர் ரணசிங்காவுக்கு பொறுப்பு மாற்றப்பட்டதில் தலையிட முடியாது என்றும் கூறிவிட்டார்.

ஜெனரல் வனசிங்கா, ரெறன்ஸ் குணவர்த்தனாவிடம் விளக்கிய விமானப் படையின் உத்தேச நடவடிக்கைகள் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பிரசுரிக்கப்படவில்லை என்று "சண்டே ரைம்ஸின்" அரசியல் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

புதிய ஏற்பாட்டின்படி, ஒலிவர் ரணசிங்கா எதிர்காலத்தில் விமானத் தாக்குதல் நடவடிக்கைகளை ஜெனரல் வனசிங்காவின் மௌகீத பணிப்புரைகளுக்கு ஏற்பவே மேற்கொள்ளுவார்.

ஜெனரல் வனசிங்கா முதலில் ஒலிவர் ரணசிங்காவுக்கு வாய்மூலமாக வழங்கிய பணிப்புரையை, பின்னர் எழுத்து மூலம் அவருக்கு வழங்கினார். விமானப்படை நடவடிக்கைகளுக்கு அவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளதற்கான காரணங்களையும் ஜெனரல் வனசிங்கா எழுத்து மூலப் பணிப்புரையில் கூறியிருக்கிறார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக, ஜெனரல் வனசிங்கா தெரிவித்த காரணங்களை விபரமாக வெளியிட முடியாதிருப்பதாக "சண்டே ரைம்ஸ்" செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனாவுக்கும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சுச் செயலாளர் வால்டர் பெர்னாண்டோவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதலைத் தொடர்ந்து இப் புதிய நிலை உருவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

# புலிகள் - குவாக்கர் குழு பேச்சு பிரேமாவுக்கு விளக்கப்படும்

குவாக்கர் தூதுக்குழுவுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் நடந்த பேச்சுக்களின் பெறுபேறுகளை அமைச்சர் ஹமீதும், ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அறிவிக்க உள்ளனர் என்றும் —

அதன் பின்னரே விடுதலைப் புலிகளுடன் இன்னொரு சுற்றுப் பேச்சு நடுவர்கள் மூலம் நடத்தப்படக்கூடும் என்றும் —

விஷயமறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள "சண்டே ஒப்சேவர்" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அரசு தரப்பிலான பேச்சுக்களை நடத்தும் மூன்று சிரேஷ்ட பிரமுகர்களான அமைச்சர்கள் தொண்டமான், ஹமீது மற்றும் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர், குவாக்கர் சமாதான முயற்சி பற்றி எதுவும் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

குவாக்கர் தூதுக்குழு யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்னரும் பின்னரும் அக்குழுவைத் தாம் சந்தித்ததை ஒப்புக்கொண்ட அமைச்சர் ஹமீது —

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு அரசியல் தீர்வாகவே இருக்க முடியும் என்று அரசு திரும்பத்திரும்பக் கூறி வருகிறது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

## இளவாலைக்கு செஞ்சிலுவை அதிகாரிகள்

யாழ்ப்பாணம், நவ. 17

இளவாலை, மாதகல் பகுதிகளில் சிக்கியுள்ளவர்களின் நிலையைக் கண்டறியும் பொருட்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் நேற்று அங்கு சென்றனர்.

நேற்று மாலை பருத்தித்துறையில் இருந்து 'குமாரி' கப்பல் மூலமாக அவர்கள் பலாலி சென்றனர்.

இன்றும், நாளையும் இளவாலை, மாதகல் பகுதிகளில் சிக்கியுள்ளவர்களை நேரில் சந்தித்து அவர்களின் நலன்கள் பேணப்படுகின்றனவா என்பதனைக் கண்டறிவதுடன், தடுத்து வைக்கப்பட்டவர்களையும் செஞ்சிலுவை அதிகாரிகள் பார்வையிடுவர். (அ-8 162)

## மங்களமுனசிங்கவுடன் குவாக்கர் குழு பேச்சு

கொழும்பு, நவ. 17

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு கொழும்பு திரும்பிய குவாக்கர் சமாதானத் தூதுக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுத் தலைவர் மங்கள முனசிங்காவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவையும் அக்குழு சந்தித்தது. (உ-எ)

### அரசு - புளொட்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தயாரிக்கப்படுவதாகக் கூறப்படும் அறிக்கைகள் வெளியாவதை ஆரும் என்றும் ... வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

## மரண அறிவித்தல்

### சீதாராமன் சிங்காரவேலு

29/10, சேச்சேன் ஒட்டுமடத்தைச் சேர்ந்த திரு. சீதாராமன் சிங்காரவேலு 16-11-92 நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற காமாட்சியின் அன்புக் கணவரும், ஜெயமணி, நாகேஸ்வரி, நவநீதரட்ணம், பாலசுப்பிரமணியம், யோகநாதன், ஆனந்தராசா, கலாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தங்கவேலு, பாலகிருஷ்ணன், பரமசிவம், வனிதா, ராஜராஜேஸ்வரி, ஜெயந்தி, காளிதாஸ் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-11-92 இன்று பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

(23296)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org